13.11.2025

OS. No.191/2017

**பி.வா.சா.1 –** திரு.செல்வராஜ், த/பெ.திரு.பிச்சைமுத்து

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் தகவல் சொன்னதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. வழக்கில் கண்ட சொத்தில் வீடு கட்டுவதற்கு எவ்வளவு ரூபாய் செலவானது என்றால் ரூ.18,00,000/– செலவானது. அந்த வீடு கட்டுவதற்கு முறையான அனுமதி பெற்று இருக்கிறேன். அந்த ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன். எனக்கு தொழில் விவசாயம், ரியல் எஸ்டேட் மற்றும் தரகு வேலை ஆகும். 2013 ஆம் வருடம் நான் வீடு கட்டும் போது என்னுடைய வருமானம் எவ்வளவு என்றால் வருடத்திற்கு ரூபாய் ஐந்து லட்சம் ஆகும். நான் மணிவேலுவிடம் ரூபாய் 4 லட்சம் கடன் வாங்கினேன். அவ்வாறு கடன் வாங்கும் போது 100 ரூபாய் பத்திரத்தில் எழுதி வாங்கிக் கொண்டார்கள். மணி வேலுவை எனக்கு எத்தனை வருட காலமாக தெரியும் என்றால் 2013க்கு முன்பாக 5 வருட காலமாக தெரியும். மணிவேலு தவிர வேறு நபர்களிடம் நான் கடன் வாங்கி இருக்கிறேனா என்றால் சொந்த பந்தங்களிடம் வாங்கி இருக்கிறேன். வங்கி கடன் இல்லை. நான் மணிவேலுவிடம் எதற்காக கடன் வாங்கினேன் என்றால் குழந்தைகளின் படிப்பு செலவு மற்றும் வைத்திய செலவுக்காக அந்த பணம் கடன் வாங்கினேன். என் மனைவியின் கால் மூட்டு இணைந்து விட்டது. அதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று. . மருத்துவமனை ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. மணி வேலு ஆட்களை வைத்து மிரட்டி சொத்துக்களை வாங்குவார் என்று நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறேன். அவ்வாறு தெரிந்த பிறகு ஏன் மணிவேல் இடம் சென்று பணம் கடன் வாங்கினேன் என்றால் அப்போது

Approved

எனக்கு அவர் நட்பாக இருந்தார். மணிவேலுவின் சொந்த ஊர் பெரம்பலூர் மாவட்டம் மங்கூர் கிராமம் ஆகும். எனக்கு சொந்த ஊர் துறையூர் ஆகும். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்தபோது பல ஊர்களுக்கும் சென்றிருக்கிறேன். அதன் மூலம் அவர் எனக்கு பழக்கம் ஆனார். எனக்கு வங்கி கடன் இல்லை என்றும், கடன் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை என்றும் எனவே மணிவேலுவிடம் 36 சதவீத வட்டிக்கு பணம் கடன் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2015 ஆம் வருடம் நான் மணிவேலுக்கு சொத்தை கிரையம் செய்யும்போது சார் பதிவாளர் அலுவலகம் சென்று ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். சார் பதிவாளர் என்னிடம் பணத்தை வாங்கி விட்டீர்களா என்று கேட்டார். பக்கத்தில் அடியாட்கள் இருந்ததால் நான் மௌனமாக தெரிவித்து விட்டேன். அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்ட பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்திருக்கிறேன். மணி வேலு எனக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் முச்சலிக்கா ஆவணம் அசல் யாரிடம் இருக்கிறது என்றால் என்னிடம் தான் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருக்கிறேன். நான் தகுந்த மறு பயன் பெற்றுக் கொண்டு விட்டு சொத்தை கிரையம் செய்து கொடுத்து விட்டேன் என்றும், தற்போது சொத்தில் மதிப்பு உயர்ந்த காரணத்தினால் ஆட்சேபனை செய்கிறேன் என்றால் சரியல்ல. அதை நான் ஆட்சேபிக்கிறேன். இந்த வழக்கின் வாதி தகுந்த மறுமையின் செலுத்தி சொத்தை கிரையம் வாங்கி இருக்கிறார் என்றும் அதை ஆட்சேபனை செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வாதி கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதாக இருக்கிறது என்றும் எனது எதிர் வாதம் செல்லத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. நான் மணி வேலுக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்த போது சொத்தின் சுவாதீனம் அவர் வசம் ஒப்படைத்து விட்டேன் என்றும் அதன் பின்னர் வாதி கிரையம் பெற்ற பிறகு வழக்குரை சொத்தின் சுவாதீனத்தை அவர் அடைந்து அனுபவம் செய்து வருகிறார் என்றும் நான் எந்த

காலத்திலும் சுவாதீனத்தில் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. தற்போது வரை நான் தான் சொத்தில் இருக்கிறேன். நான் சொத்தை பெருமாள் மற்றும் சரவணன் என்ற நபர்களிடம் இருந்து கிரையம் வாங்கினேன். அந்த அசல் கிரைய பத்திரம் மணிவேலுவிடம் கொடுத்திருந்தேன். தற்போது அவரிடம் இருந்து சண்முகம் வசம் இருக்கிறது. நான் பொய்யான காரணங்களை கூறி வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்ய எத்தனை வழக்கு தாக்கல் செய்ய நேரிட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டு இருக்கக்கூடிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe